ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1796/41- 2013 පෙබරවාරි 08 වැනි සිකුරාදා - 2013.02.08
1796/41 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சபரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கிரிஎல்ல பிரதேச செயலாளர் பிரிவில், குருவிட்ட கோறளை மெதபத்துவை சிறு பிரிவில், கிரிஎல்ல (மு.கி.ப. 182) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்/கேஆர்ஈ/ 2012/ 25 ஆம் இலக்கமும் 2012.06.09 ஆந் திகதியும் கொண்ட சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0037 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய படஹெலேவத்த என்னும் காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - படஹெலேவத்த - விஸ்தீரணம் : சுமார் 0.0037 ஹெக்டயார்**

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு : துண்டு இல. 326.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/9/2011/டபிள்யுஎஸ்/ 291.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2013.01.04.

02 - 820

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மாத்தளை மாவட்டத்தில், அம்பன்கங்கை கோறளை பிரதேச செயலாளர் பிரிவில், அம்பன்கங்கை கோறளை சிறு பிரிவில், கரகஹாதென்ன கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தளை மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட எம்ஏ/ஏஎம்பீ/2006/ 328 ஆம் இலக்கமும் 2007.01.30 ஆந் திகதியும் கொண்ட முதற்சுவட்டு வரைபடத்தில் 0.3746 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட ஏ, பீ எனும் இரண்டு காணித் துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு:

**01. துண்டு 'ஏ' - கரகஹதென்ன தோட்டம் - விஸ்தீரணம் : 0.3746 ஹெக்டயார்**

வடக்கு, கிழக்கு : காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கரகஹதென்ன தோட்டம்; தெற்கு : காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கரகஹதென்ன தோட்டம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு சொந்தமான கரகஹதென்ன தோட்டம்; மேற்கு : வீதி மற்றும் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கரகஹதென்ன தோட்டம்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : எல்டீ/05/ 2001/ ஜஎம்/ 296.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2012.12.04.

02 - 821

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.